தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2022

ஆண்டு: 8 திகதி: 18.06.2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர் : திருமதி. சத்தியதேவி பாலகங்காதரன்

மாணவர் பெயர்: ________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 20 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 25 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் உரைப் பகுதியை வாசித்து கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

குழந்தைகளுக்காகப் பாடும் பாடல் குழந்தைப் பாடல் எனப்படும். இது கற்றவர்களையும் கல்லாதவர்களையும் ஒருங்கே இணைக்கக் கூடியது. விலங்குகளும் பறவைகளும் இனிய இசைக்கு உருகும் இயல்புடையன. பயிரினங்களும் இசையால் செழிப்புறும் என்று விஞ்ஞானிகள் கண்டு கூறி உள்ளனர். இது உண்மையிலேயே வியக்கத்தக்கது. அதனால், குழந்தைகளும் இன்னிசை கேட்டு இன்புறுவது இயல்பே.

அழுகிற குழந்தையை அமைதிப்படுத்த அதன் தாய் பாடுகிறாள். அந்த ஓசை கேட்டு குழந்தை உறங்குகிறது. அப்பாடல் இனிய ஓசையைக் கொண்டிருக்கும். அதுவே தாலாட்டாகவும் குழந்தைப் பாடலாகவும் உருப்பெறுகிறது. குழந்தையைத் தாய்மார் தொட்டிலில் இட்டுத் தாலாட்டும் போது பாடல்களைப் பாடுவர். இவ்வகைப் பாடல்கள் இராகம், தாளம் போன்ற அமைப்போடு பொருந்தாமல் இருந்தாலும் இனிய ஓசை நயம் மிகுந்து இருக்கும். எனவேதான், அவை குழந்தைகளின் உள்ளங்களைக் கவர்கின்றன.

தங்கள் தாய்மார் எழுப்பும் ஓசை நயம் மிக்க ஒலிகளைக் கேட்ட குழந்தைகள் தாமும் அதுபோன்ற ஒலிகளை எழுப்புவர். குழந்தைகள் சற்று வளர்ந்த நிலையில் அந்த ஒலியோடு சில சொற்களையும் சேர்த்து ஒலிக்க முற்படுவர். அந்நிலையில் அவர்களின் வாயிலிருந்து வரும் சொற்கள் முழு வடிவம் பெறாமல் சிதைந்தும் திரிந்தும் இருக்கும். அதனை மழலைமொழி என்று கூறுவர். அத்தகைய பொருள் இல்லாத மழலைச் சொற்கள், பெற்றோர்களுக்கும் மற்றவர்களுக்கும் பேரின்பம் பயக்கும். குழலினும் யாழினும் மிக்க இன்பம் பயக்கவல்லது மழலைச் சொல் என்பது திருவள்ளுவர் கருத்தாகும்.

இனிய ஓசையுடைய குழந்தைப் பாடல்களின் சிறப்பினை உணர்ந்த புலவர்களும் குழந்தைகளுக்கான பாடல்களைப் பாடினர். குழந்தைகள் பெரியவர்களாக வளர்ந்த நிலையில் அவர்களின் சிந்தையைச் செம்மை செய்வதற்கு குழந்தைப் பாடல்கள் பேருதவியாக அமையும் என புலவர்கள் உணர்ந்தனர். அதனால் அவர்கள் அரிய கருத்துக்களைக் கொண்ட பல குழந்தைப் பாடல்களை உருவாக்கினர்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிதை இலக்கியத்தில் குழந்தைப் பாடல்களைத் தமிழில் அறிமுகம் செய்த பெருமை பாரதியாரைச் சாரும். அவரைப் போன்றே கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், பாரதிதாசன் போன்றோர் குழந்தைப் பாடல்கள் பல பாடியுள்ளனர். குழந்தைப் பாடல்கள் இயற்றிய அழ வள்ளியப்பா, குழந்தை கவிஞர் என்று சிறப்புப் பெற்று பெயர் பெற்றுத் திகழ்கிறார்.

(நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை)

1. அறிவியல் அறிஞர்கள் இசையின் பயன் என எதனைக் குறிப்பிடுகின்றனர்?

___

___

___

2. தாலாட்டுப் பாடலைக் கேட்கும் குழந்தைகளின் மனதைக் கவர்வது எது?

___

___

___

3. மழலை மொழி என்றால் என்ன?
மழலைச் சொல் பற்றிய திருவள்ளுவர் கருத்து என்ன?

___

___

___

4. புலவர்கள் எதற்காகக் குழந்தைப் பாடல்களை இயற்றினர்?

___

___

___

5. நீங்கள் குழந்தைப் பாடல்கள் பலவற்றைக் கேட்டிருப்பீர்கள். அப்பாடல்களைக் கேட்ட போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தை எழுதுக?

___

___

___

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**இரண்டு மருந்தகங்களின் அறிவிப்புப் பலகையில் காணப்படும் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கவனமாகப் படியுங்கள். பின்பு கேள்விக்கு பதில் எழுதுங்கள்.**

**குணாளன் தனியார் மருந்தகம்**

**திறந்திருக்கும் நேரம்**

- திங்கள் முதல் வெள்ளி வரை
  காலை 9.00 முதல் நண்பகல்12.00 மணி வரை
  பிற்பகல் 2.00 முதல் மாலை 4.00 மணி வரை
  மாலை 6.00 முதல் இரவு 9.00 மணி வரை
- சனி ஞாயிறு
  காலை9.00 முதல்- பிற்பகல்12.30 மணி
- முதியோர் மருத்துவப் பரிசோதனை
- வீட்டிற்கு வந்து சிகிச்சை வழங்கும் சேவையும் உண்டு

**ரகு தாய் சேய் நல மருந்தகம்**

**திறந்திருக்கும் நேரம்**

- திங்கள் முதல் வெள்ளி வரை
  காலை 9.00 முதல் நண்பகல் 12.30மணி வரை
  பிற்பகல 2.00 முதல் மாலை 4.00 மணி வரை
  மாலை 6.00 முதல் இரவு 9.30 மணி வரை
- வார இறுதி நாட்கள்
  பொது விடுமுறை நாட்கள்
  காலை9.00 முதல் நண்பகல்12.30மணி வரை

1. குணாளன் தனியார் மருந்தகம் எத்தனை நாட்களுக்கு இரவு வரை திறந்திருக்கும்?

______________________________________________

______________________________________________

______________________________________________

2. தொழிலாளர் தினத்தன்று உன் தங்கைக்கு உடல் நலமில்லை, உன் தாயார் அவளை எந்த மருந்தகத்திற்கு அழைத்து செல்வார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

3. ரகு தாய் சேய் நல மருந்தகம் சனிக்கிழமைகளில் எத்தனை மணி நேரம் சேவை வழங்கும்?

______________________________________________

______________________________________________

______________________________________________

4. குணாளன் தனியார் மருந்தகத்தில் என்னென்ன வேறுபட்ட சேவைகள் வழங்கப்படுகின்றன?

______________________________________________

______________________________________________

______________________________________________

5. வீட்டிற்கு வந்து சிகிச்சையளிக்கும் சேவை யாருக்கு அதிகமாகப் பயன் அளிக்கும் என்று நீ நினைக்கின்றாய்?

______________________________________________

______________________________________________

______________________________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

**பின்வரும் சொற்களை வைத்து ஐந்து சொற்களுக்குக் குறையாமல் வாக்கியம் எழுதுக.**

1. வீட்டுத்தோட்டம்

_______________________________________________

_______________________________________________

2. பெற்றோர்கள்

_______________________________________________

_______________________________________________

3. புத்தகம் வாசித்தல்

_______________________________________________

_______________________________________________

4. ஜல்லிக்கட்டு

_______________________________________________

_______________________________________________

5. கிளித்தட்டு

_______________________________________________

_______________________________________________

6. உடற்பயிற்சி

_______________________________________________

_______________________________________________

7. மடிக்கணனி

_______________________________________________

8. பாரதியார்

9. பாரம்பரிய விளையாட்டுக்கள்

10. பண்டிகைகள்

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியமாக மாற்றி எழுதுக.

1. நான் மாலை நான்கு மணிக்குப் பள்ளியிலிருந்து வந்தேன்.
2. நான் ஒரு மணிநேரம் நண்பர்களுடன் பந்து விளையாடினேன்.
3. நான் அம்மா சமைத்த உணவை ருசித்துச் சாப்பிட்டேன்.
4. நான் எனது பள்ளி வீட்டுப் பாடங்களைச் செய்தேன்.
5. நான் பத்து மணிக்கு நித்திரைக்குச் சென்றேன்.

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

**பின்வருவனவற்றில் ஒன்றைப் பற்றி கடிதம் எழுதுக. 70 சொற்களுக்குக் குறையாமல் இருக்க வேண்டும் (20 புள்ளிகள்)**

- நீங்கள் குடும்பத்தினருடன் சென்று வந்த ஒரு பயண அனுபவம் பற்றி உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக.
- உங்கள் உடல் நலத்தை காக்க நீங்கள் செய்யும் செயல்கள் பற்றி உங்கள் நண்பருக்கு கடிதம் எழுதுக.

| வினா இல | 6 | புள்ளிகள் | 25 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**கீழேயுள்ள தலைப்புக்களில் ஒன்றைத் தெரிந்து எடுத்து 130 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ஓய்வு நேர நடவடிக்கைகள்
- தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள்